தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலை மாணவர்களால் மக்கள் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளங்கலை ஆற்றல் & சுற்றுச்சூழல் பொறியியல் துறை மாணவர்களால் Ecoclub நடத்தப்படுகிறது. இது செப்டம்பர் 16, 2015 அன்று நடத்தப்படும் Ecofest'15-ன் முன்னோட்ட முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஒரு நிகழ்வாக ஆகஸ்ட் 30, 2015 அன்று “மக்கள் விழிப்புணர்வு முகாம்” நடத்தப்பட்டது. மின்சேமிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான விழப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவதே இம்முகாமின் முக்கிய நோக்கமாகும். இம்மாபெரும் மக்கள் விழிப்புணர்வு முகாம் கோவை தெலுங்குப்பாளையம் முத்துமாரியம்மன் கோவில் மண்டபத்தில் காலை 10 மணியளவில் நடத்தப்பட்டது.

நிகழ்விற்கு செல்வி.மீனா வறவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர். மகேந்திரன், உதவிபேராசிரியர், உயிர் ஆற்றல் துறை அவர்கள் பிளாஸ்டிக் பைகள், மற்றும் டிடெர்ஜண்டுகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளையும் LED பல்புகளின் முக்கியத்துவத்தையும் பொதுமக்கள் எளிதில் புரிந்துக் கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தார்.

Green Thumb நிறுவனர் திருமதி.பூர்ணிமா அவர்கள் வெளிக்கூட்டில் சோப்புத்தன்மைக் கொண்ட பூந்திக்கொட்டைகளை (Soap nut) பற்றிக் கூறினார். இதனைப் பயன்படுத்துவதால் ஒரு குடும்பத்தின் டிடெர்ஜண்டுகளுக்கான மாதச்செலவு தோராயமாக ரூபாய் 400 லிருந்து ரூபாய் 50 வரை குறையும் மற்றும் இது மண் வளத்திற்கு எந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை எனவும் கூறினார். காயவைத்து அரைத்து பொடியாகவும் இக்காயை உபயோகிக்கலாம். பாத்திரங்களின் எண்ணெய்

பசையை முற்றிலும் போக்கவல்லதெனவும் கூறினார். மேலும் இதன் பயன்பாடு குறித்த செயல்முறை விளக்கமும் அளித்தார்.

எக்செஸ் ஆற்றல் அமைப்பின் திட்டபொறியாளர் திரு. மாரியப்பன், LED பல்புகள் ஆற்றல் சேமிப்பு மற்றும் குறைந்த மாசுபாட்டிற்கு வழிவகுக்கிறது என்றார். இவை குண்டு பல்புகளுக்கு இணையான வெளிச்சத்தை குறைந்த அளவு மின்சார செலவழிப்பில் தருகின்றன. எனவே 5 வாட் திறனுள்ள LED பல்புகளை பயன்படுத்தும்படி அறிவுறுத்தினார். கோவில் நிர்வாகத் தலைவர்கள் திரு.தே.வா.பழனிச்சாமி மற்றும் செல்வராஜ் ஆகியோர் சிறப்புரை நல்கினர்.

எக்செஸ் ஆற்றல் அமைப்பின் திட்டமேலாளர் திரு. வசந்த் 5 வாட் திறன் மற்றும் ரூபாய் 200 மதிப்புள்ள 100 LED பல்புகளை தேர்ந்தேடுக்கப்பட்ட 100 வீடுகளுக்கு இலவசமாக வழங்கினார். இதனை மேடையில் ஊர் பொதுமக்கள் சார்பாக ஊர் தலைவர்கள் பெற்றுக்கொண்டனர். மேலும் 500 துணிப்பைகள் மற்றும் 100 மரக்கன்றுகள் பல்கலைக்கழகம் சார்பில் மக்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டன.

இறுதியாக திரு. மகேந்திரன் அவர்கள், திரு. வசந்த், திரு.தே.வா.பழனிச்சாமி மற்றும் திருமதி.பூர்ணிமா ஆகியோருக்கு நினைவுப் பரிசினை வழங்கினார். நிகழ்வின் முடிவில் செல்வன்.உலகமணி வருகை தந்த அனைவருக்கும் நன்றியுரை நல்கினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்